CEETS

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாணவர்களுக்கான

முதலாம் தவணை முன்னோடிப் பரீட்சை – ஜுலை 2023

22 T I

Grade 12

புவியியல் - I

Index No:

03 மணித்தியாலம் 10 நிமிடம்

அறிவுறுத்தல்கள்:

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி - I , 15 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. பகுதி - I இற்கான விடைகளை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் அடைப்பினுள் எழுதுக.
- பகுதி - II, இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் கட்டாயம் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி - III, இல் அ,ஆ,இ எனும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவைத் தெரிவுசெய்து மூன்று வினாக்களுக்கு மட்டும் விடைதருகு.
- பகுதி - I, பகுதி - II, பகுதி - III, ஆகியவற்றுக்குரிய வினாத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

## பகுதி - I

- ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.

01. புவியியல் தகவல் முறைமையில் இடஞ்சார்ந்த தரவு வகை எது?
1. பயிர்களின் பரம்பல் 2. குடித்தொகை அளவு 3. பயிர்களின் கீழுள்ள நிலத்தின் விஸ்தீரணம்
4. வீதியொன்றின் நீளம் 5. அயன மழைக்காடுகள் (..............)

02. புவியியல் தகவல் முறைமையில் காவித்தரவு வடிவத்தில் புள்ளிகளாக சேமிக்கப்படும் தரவு வகை எது?
1. நீர்த்தேக்கம், பயிர் நிலப்பகுதி 2. வீதிகள், ஆறுகள் 3. கட்டடங்கள், கிணறு
4. குளங்கள், காடுகள் 5. நகரங்கள், பெருந்தோட்டம் (...............)

03. பூகோள இடைநிலைப் படுத்தல் முறைமையில் வான்வெளிப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள செய்மதிகள் பயணம் செய்யும் வேகம் மணித்தியாலத்திற்கு யாது?
1. 11000 2. 14000 3. 20200 4. 22200 5. 24000 (...............)

04. பூகோள இடப்படுத்தல் முறைமையின் உடுத்தொகுதியின் ஒரு ஒழுக்கில் எத்தனை செய்மதிகள் வலம் வருகிறது.
1. 31 2. 24 3. 6 4. 4 5. 5 (...............)

05. தொலையுணர்வு மேடைத் தொழில்நுட்பத்தில் வான்வழி மேடையில் பறந்து படமெடுக்கும் கருவிகள் (Drones) பறக்கும் உயரம் யாது?
1. 50 m 2. 150 m 3. 250 m 4. 1500 m 5. 36000 m (...............)

06. பின்வருவனவற்றுள் எது கற்கோளத்தின் மேற்பகுதியாகும்?
1. ஓடு மற்றும் மேல்மூடியின் மேற்பகுதியாகும் 2. கண்ட ஓடு மற்றும் சமுத்திர ஓடாகும்
3. மலைத்தொடர் மற்றும் பள்ளத்தாக்குகளாகும் 4. மேட்டு நிலங்கள் மற்றும் சமவெளிகளாகும்
5. பரிசை நிலங்கள் மற்றும் சாய்வு நிலங்களாகும் (...............)

07. புவி மேற்பரப்பிலிருந்து துருவப்பகுதியில் மாறன் மண்டலத்தின் எல்லையினைத் தருக.

1. 8 km 2. 14 km 3. 16 km 4. 50 km 5. 80 km (..............)

08. பின்வருவனவற்றுள் புவியின் உட்கட்டமைப்பில் அடர்த்தி குறைந்த படையினை தேரிவு செய்க.

1. உள் அகணி 2. வெளி அகணி 2. கீழ்மூடி 4. மேல்முடி 5. ஓடு (...............)

09. பின்வரும் தீப்பாறைகளில் எது கீழ் பாதாளத் தீப்பாறையாகக் கருத முடியும்.

1. டயோறைற் பாறை 2. கப்புறோப்பாறை 3. கிரணைற் பாறை
4. ஆண்டிசைற் பாறை 5. பெரிடோடைட் பாறை (..............)

10. பின்வரும் மண்வகையினுள் மண்ணின் பக்கப்பார்வையினை கொண்டிராத மண் வகை யாது?

1. செங்கபிலலற்றசோல் மண் 2. செம்மஞ்சள் பொற்சொலிக் மண் 3. செங்கபிலநிறமண்
4. ரெகோசேல்ஸ் 5. வண்டல் மண் (..............)

11. "மனிதன் மற்றும் சூழலுக்கிடையிலான தொடர்புகளைக் கற்பது புவியியலாகும்" இக்கூற்றினை முன்வைத்த அறிஞர்

1. அலெக்சாண்டர் வொன் கம்போல்ட் 2. ரிச்சட் கார்ட்சோன் 3. றட்சல்
4. ஏரடோஸ்தெனிஸ் 5. அனக்ஸிமெண்டர் (...............)

12. உலகில் சனத்தொகை அடர்த்தி மிக உயர்ந்தளவில் காணப்படும் பிரதேசங்களுள் முதன்மையானது.

1. ஐரோப்பா 2. வடகிழ் ஐக்கிய அமெரிக்கா 3. கிழக்காசியா
4. தென்னாசியா 5. தென்கிழக்காசியா (...............)

13. தேசியம், இனம், மதம், அரசியல் மற்றும் சூழல் அனர்த்தங்களால் தற்காலிகமாக நாட்டை விட்டு வெளியேறுவோறை அழைப்பது

1. இடப்பெயர்வு 2. அகதி 3. தஞ்சமடைதல் 4. குடிவரவு 5. குடியாகழ்வு (...............)

14. இலங்கையின் சனத்தொகையின் இடரீதியான பரம்பலில் வருடாந்த வளர்ச்சி வேகம் கூடிய மற்றும் குறைந்த மாவட்டங்களைக் கொண்ட விடை எது?

1. கொழும்பு மற்றும் முல்லைதீவு 2. கம்பஹா மற்றும் கிளிநொச்சி
3. கிளிநொச்சி மற்றும் முல்லைதீவு 4. அனுராதபுரம் மற்றும் நுவரெலியா
5. களுத்துறை மற்றும் மன்னார் (...............)

15. இலங்கையின் மொத்த சனத்தொகையில் 5.2 சதவீதமானோர் பரம்பிக்காணப்படும் மாகாணம் எது?

1. மேல் மாகாணம் 2. தென் மாகாணம் 3. கிழக்கு மாகாணம்
4. வடமாகாணம் 5. மத்திய மாகாணம் (...............)

**அறிவுறுத்தல்கள்:**

- **பகுதி - II, இலுள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்**
- **இவ்வினாத்தாள்களுக்கு விடையளிப்பதற்காக இலங்கையில் 1:50000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படம் மற்றும் உலகப் புறவுருவப் படம் என்பன வழங்கப்படும்.**

---

## பகுதி - II

01. இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50000 அளவுத் திட்டத்திலமைந்த இரத்தினபுரி பிரதேச இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்கு தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக் கோடுகளின் இடைவெளி 20m களினால் தரப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

 i) தரப்பட்டுள்ள படத்தில் இனங்காணப்படும் நிர்வாக எல்லையினையும் அதனை தீர்மானிக்கும் பௌதீகக் காரணியினையும் பெயரிடுக (2 புள்ளிகள்)
 ii) படத்தில் இனங்காணப்படும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் நான்கு தருக (4 புள்ளிகள்)
 iii) படத்தில் G எனும் அடைப்பினுள் அமைந்துள்ள சேவை வழங்கும் நிலையங்கள் ஆறு தருக. (3 புள்ளிகள்)
 iv) தரப்பட்டுள்ள படத்தில் எவ் அரைப்பகுதி விருத்தியடைந்த பிரதேசமாகும். (2 புள்ளிகள்)
 v) உமக்கு வழங்கப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தின் தரைத் தோற்றத்தை இனங்காண்பதற்கு பயன்படுத்திய நுட்ப முறைகள் மூன்று தருக (3 புள்ளிகள்)
 vi) இட விளக்கப்படத்தின் பரப்பளவை கணப்பிடுக. (2 புள்ளிகள்)
 vii) இடவிளக்கப்படத்தில் இனங்காணப்படும் வீதி வலயமைப்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

02. தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும் நிறங்களையும் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

 i) மகரக்கோடு
 ii) கலகாரிப் பாலைவனம்
 iii) லீனா நதி
 iv) அற்லஸ் மலைத்தொடர்
 v) பனாமாக் கால்வாய்
 vi) லிபிறடோர் நீரோட்டம்
 vii) ஐஸ்லாந்து
 viii) செங்கடல்
 ix) உலகில் உயரத்தில் அமைந்த ஏரி
 x) மத்திய தரைக் கடலையும் அத்திலாந்திக் சமுத்திரத்தையும் இணைக்கும் கால்வாய்

## பகுதி - III

### (அ) பௌதீகப் புவியியல்

03. i) புவித்தொகுதியின் உப தொகுதிகள் நான்கினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
 ii) புவிக்கோளத்தின் பிரதான படைகள் இரண்டினைப் பெயரிட்டு அதன் முனைப்பான பண்புகளை விபரிக்குக (6 புள்ளிகள்)
 iii) வளிமண்டலத்தின் பிரதான படைகள் இரண்டினைப் பெயரிட்டு அவற்றின் பண்புகளை விபரிக்குக. (6 புள்ளிகள்)
 iv) கற்கோளத்தின் முக்கியத்துவம் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

**04.** i) மண் உருவாக்கத்தினைத் தீர்மானிக்கும் காரணிகள் நான்கு தருக. *(2 புள்ளிகள்)*

ii) இலங்கையின் உலர் வலயத்தில் காணப்படும் மண் வகைகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றின் இயல்புகளை விபரிக்குக. *(6 புள்ளிகள்)*

iii) இலங்கையில் பின்பற்றப்படும் மட்பாதுகாப்பு முறைகள் இரண்டினைப் பெயரிட்டு விபரிக்குக. *(6 புள்ளிகள்)*

iv) இலங்கையில் மட்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சவாலாகக் காணப்படும் மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

### (ஆ) மானிடப் புவியியல்

**05.** i) சர்வதேச குடிப்பெயர்வில் அகதிகள் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. *(2 புள்ளிகள்)*

ii) சர்வதேச குடிப்பெயர்வினை ஏற்படுத்தும் ஈர்த்தல் காரணிகள் மூன்றினைப் பெயரிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

iii) சர்வதேச குடிப்பெயர்வினால் ஆரம்ப நாடுகள் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

iv) சர்வதேச குடிப்பெயர்வினால் குடியேறும் நாடுகளில் ஏற்படும் பாதகமான விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

**06.** i) குடித்தொகை அடர்த்தி என்றால் என்ன? *(3 புள்ளிகள்)*

ii) இலங்கையின் சனத்தொகை பரம்பல் மற்றும் அடர்த்தியில் காணப்படும் மூன்று முனைப்பான பண்புகளை விபரிக்குக. *(6 புள்ளிகள்)*

iii) இலங்கையில் முதியோர் சனத்தொகை அதிகரிப்பதனால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

iv) இலங்கையில் பால்விகிதம் வீழ்ச்சியடைவதனால் ஏற்பாடும் விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

### (இ) செய்முறைப் புவியியல்

**05.** i) செய்முறைப்புவியியலில் தகவல்களை முன் வைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற நுட்ப முறைகள் நான்கு தருக. *(2 புள்ளிகள்)*

ii) செய்முறைப்புவியியல் நுட்ப முறைகளின் பயன்பாடுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விபரிக்குக. *(6 புள்ளிகள்)*

iii) புவியியல் தகவல் தொடர்பாடலில் செய்முறைப் புவியியலின் தொழில்நுட்பங்களின் பயன்பாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. *(4 புள்ளிகள்)*

iv) கருப்பொருட் படங்கள் தயாரிக்கப்படும் நுட்ப முறைகள் மூன்று தருக *(3 புள்ளிகள்)*

**06.** i) பூகோள இடப்படுத்தல் முறைமை (GPS) என்றால் என்ன? *(2 புள்ளிகள்)*

ii) பூகோள இடப்படுத்தல் முறைமையின் பிரதான கூறுகளைப் பெயரிட்டு ஒன்றின் பண்புகளை விபரிக்குக. *(5 புள்ளிகள்)*

iii) பூகோள இடப்படுத்தல் முறைமையின் துல்லியத் தன்மையினை பாதிக்கும் காரணிகள் இரண்டினைப் பெயரிட்டு விளக்குக. *(5 புள்ளிகள்)*

iv) பூகோள இடப்படுத்தல் முறைமையின் நன்மைகள் மூன்று தருக. *(3 புள்ளிகள்)*